## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

---

### வியாழக்கிழமை, 1978 மார்ச் 23.

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே ...

குறிப்பு:— ...ர் உரையின் தொடக்கத்தில் * உடுக்குறி இடம்பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

### 1. ஒழுங்குப் பிரச்சினைகள்.

(அ) முதல் ஒரு மணிநேரத்தில் வினாக்கள்-விடைகள் எடுத்துக்கொள்ளாமல் வேறு அலுவல்களை எடுத்துக் கொள்வது குறித்து.

திரு. துரை முருகன்: பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே, இந்த அவையில் முதலில் கேள்வி நேரம் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். அதற்கு பிறகுதான் மற்ற காரியங்யங்களை எடுத்துக்கொள்வதானால் எடுத்துக்கொள்ளலாம். ஆகவே, முதலில் ஏன் கேள்விகளை எடுத்துக்கொள்ளாமல் முன்னவர் அவர்களை அறிக்கை அளிக்க அழைக்கிறீர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அனுமதியோடுதான் இதைப் படிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### (2) அரசினர் தீர்மானம்

### விதி 22ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவர் அவர்களே, "சட்டமன்றப் பேரவையில் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்—விடைகள்' என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 22-ஐ இன்று தளர்த்த வேண்டும்.'' என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.